2024 - වාර්ෂික කාර්ය සාධන හා ගිණුම් වාර්තාව

செயல்திறன் மற்றும் நிதி அறிக்கை - 2024

Performance and Financial Report - 2024

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - කොළඹ

மாவட்ட செயலகம் - கொழும்பு

DISTRICT SECRETARIAT - COLOMBO

2024 ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை

மாவட்ட செயலகம் - கொழும்பு

செலவுத் தலைப்பு இலக்கம் *255*

தொலைபேசி இலக்கம்	-	0112 369 134 / 0112 369 136
தொலை நகல்	-	0112 369 142
இணையத்தளம்	-	colombo.dist.gov.lk
மின்அஞ்சல் முகவரி	-	ds@colombo.dist.gov.lk

உள்ளடக்கம்

தொடர் இலக்கம்	தலைப்பு	பக்க இலக்கம்
1.	அத்தியாயம் -நிறுவன விபரத் திரட்டு /செயல்படுத்தலின் சாரம்சம்	
1.1	மாவட்டம் தொடர்பான அறிமுகம்..	05
1.2	நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்..	08
1.3	பிரதான பணிகள்..	09
1.4	அமைப்பு அட்வைணை..	10
1.5	மாவட்ட செயலகத்தின் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்கள்…….	
1.5.1	பிரதேச செயலகங்கள் தொடர்பான அடிப்படை தகவல்கள் தகவல்கள்...	11
1.5.2	பிரதேச செயலகங்களில் நிறைவேற்றப்படும் பிரதான பணிகள்...	12
1.5.3	பிரதேச செயலகங்களின் அடைவுகள்........................	53
1.5.4	பிரதேச செயலகங்கள் எதிர்நோக்கிய சவால்கள்.....	12
1.5.5	பிரதேச செயலகங்களின் எதிர்கால இலக்குகள்....	17
2.	அத்தியாயம் – முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு (விசேட அடைவுகள், சவால்கள், எதிர்கால இலக்குகள்)	
2.1	விசேட அடைவுகள்..	25
2.1.1	தாபன நிர்வாகம் மற்றும் நிதியிடல்..	25
2.1.2	பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி...	26
2.1.3	உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து...................	26
2.1.4	தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி............................	27
2.1.5	மனித வள அபிவிருத்தி..	27
2.1.6	நுகர்வோர் பாதுகாப்பு..	28
2.1.7	சமூக பாதுகாப்பு...	28
2.1.8	சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்பும் அபிவிருத்தியும்…………………………………………	28
2.1.9	சமூக அபிவிருத்தி..	29
2.1.10	சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பயனுள்ள காணிப் பயன்பாடு.	29
2.1.11	மத மற்றும் கலாச்சார அலுவல்கள்…………………….	
2.2	சவால்கள்..	
2.2.1	தாபன நிர்வாகம் மற்றும் நிதியிடல்..	30
2.2.2.	பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு	30
2.2.3	உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து……………..	30
2.2.4	தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி...	31
2.2.5	மனித வள அபிவிருத்தி...	31
2.2.6	நுகர்வோர் பாதுகாப்பு..	32

தொடர் இலக்கம்	தலைப்பு	பக்க இலக்கம்

2.2.7	சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்பும் அபிவிருத்தியும்…………………………………………	32
2.2.8	சமூக அபிவிருத்தி	32
2.2.9	சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பயனுள்ள காணிப் பயன்பாடு………………………………………	33
2.2.10	மத மற்றும் கலாச்சார அலுவல்கள்………………….	33
2.3	எதிர்கால இலக்குகள்..	
2.3.1	தாபன நிர்வாகம் மற்றும் நிதியிடல்..	33
2.3.2	பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி	34
2.3.3	உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து.	34
2.3.4	தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி...........................	34
2.3.5	மனித வள அபிவிருத்தி..	35
2.3.6	நுகர்வோர் பாதுகாப்பு..	35
2.3.7	சமூக பாதுகாப்பு	35
2.3.8	சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்பும் அபிவிருத்தியும்..	36
2.3.9	சமூக அபிவிருத்தி..	36
2.3.10	சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பயனுள்ள காணிப் பயன்பாடு.	36
2.3.11	மத மற்றும் கலாச்சார நடவடிக்கைகள்.	37
3.	அத்தியாயம் - 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை	
3.1	நிதிசார் செயலாற்றுகை கூற்று..	39
3.2	நிதி நிலை தொடர்பான கூற்று......................................	40
3.3	காசுப் பாய்ச்சல் தொடர்பான கூற்று...	41
3.4	நிதிநிலை கூற்றுகள்...	42
3.5	வருவாய் சேகரிப்பதன் செயலாற்றுகை....................................	72
3.6	ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதில் செயல்திறன்.............	73
3.7	நிதி.ஒழு விதி 208 பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களில் பிரதிநிதியாக இந்த திணைக்களம் / மாவட்ட செயலகம் / மாகாண சபைக்கு வழங்கிய ஒதுக்கீடு................	76
3.8	நிதியல்லாத சொத்துக்களை பதிவுசெய்வதன் செயலாற்றுகை...	87
3.9	கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை..	87
4.	அத்தியாயம் - செயலாற்றுகை சுட்டிகள்..	88
5.	அத்தியாயம் - நிலைபேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் (SDG) பூர்த்தி செய்துகொள்வதன் செயலாற்றுகை	101
6.	அத்தியாயம் – மனிதவள திரட்டு	
6.1	பதவியணி முகாமைத்துவம்	132
6.2	மனித வள அபிவிருத்தி..	132
7.	அத்தியாயம் – இணக்கப்பாட்டு அறிக்கை...	137

01 ஆம் அத்தியாயம்

நிறுவன விபரத் திரட்டு / செயல்படுத்தலின் சாரம்சம்

1.1. கொழும்பு மாவட்டம்

மேல் மாகாணத்திற்குரிய கொழும்பு மாவட்டம் வடக்கில் களனி ஆற்றையும், தெற்கில் பாணந்துறை பொல்கொட ஆறு மற்றும் களுத்துரை மாவட்டத்தையும், மேற்கில் இந்தியப் பெருங்கடலையும், கிழக்கில் சப்ரகமுவ மாகாணத்தையும் எல்லைகளாக கொண்டுள்ளது. இலங்கையில் 25 நிருவாக மாவட்டங்களுள் நிலப் பரப்பில் மிகச் சிறிய மாவட்டம் கொழும்பு மாவட்டமாகும். அதன் நிலப் பரப்பு, துறைமுக நகர திட்டத்திற்கான 4.47 சதுர கிலோ மீற்றரும் சேர்த்துக்கொண்டால் 703.47 சதுர கிலோ மீற்றர் ஆகும். நாட்டின் வணிக மற்றும் வர்த்தக தலைநகரான கொழும்பும், நிர்வாகத் தலைநகரான ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகரமும் அமைந்துள்ளமை கொழும்பு மாவட்டத்தின் தனித்துவமாகும்.

கொழும்பு மாவட்டம் 13 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் 557 கிராம அலுவலர் பிரிவுகளையும் கொண்டுள்ளதுடன், அதில் 500 பிரிவுகள் நகர்புறப் பிரிவுகளாவதுடன், எஞ்சிய 57 பிரிவுகள் கிராமபுறப் பிரிவுகளாகும். சீத்தாவக்க மற்றும் ஹோமாகம பிரதேச செயலகங்களில் குறித்த கிராமபுறப் பிரிவுகள் அமைந்துள்ளதுடன், ஏனைய பிரதேச செயலகங்களில் அனைத்து பிரிவுகளும் நகர்புறப் பிரிவுகள் என்று பௌதீக திட்டமிடல் திணைக்களத்தால் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும், 05 மாநகர சபைகளும், 05 நகர சபைகளும் 13 பிரதேச சபை அதிகாரப் பிரதேசங்களையும் 15 தேர்தல் அதிகாரப் பிரதேசங்களையும் கொண்டுள்ளது.

நாட்டில் அதிக சனத்தொகையும் சனத் தொகை அடர்த்தியும் இந்த மாவட்டம் கொண்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட சனத்தொகை 2,477,922 ஆவதுடன், சனத் தொகை அடர்த்தி சதுர கிலோ மீற்றருக்கு 3,545 ஆகும். கொழும்பு, தெகிவளை மற்றும் திம்பிரிகஸ்யாய அதிக சனத்தொகை அடர்த்தியுள்ள பிரிவுகளாகும். சீத்தாவக்க மற்றும் பாதுக்க ஒப்பீட்டளவில் குறைந்த சனத்தொகை அடர்த்தியை குறிக்கின்றது.

நாட்டில் உயர் பொருளாதார செயற்பாட்டினைக் கொண்டுள்ள கொழும்பு மாவட்டமானது, 2022 ஆம் ஆண்டில் தேசிய மொத்த உற்பத்தியில் அதிகூடிய பங்களிப்பை வழங்கியுள்ளது. அதேபோன்று கொழும்பு துறைமுகம், புறக்கோட்டை சார்ந்த மொத்த விற்பனை நிலையங்கள், நாராஹேன்பிட்டிய, இரத்மலானை, மீகொட, பிளியந்தலை ஆகிய மொத்த மற்றும் சில்லறை பொருளாதார நிலையங்களும், வங்கிகள், நிதி மற்றும் காப்புறுதி அடங்கலாக வர்த்தக துறையில் பெரும்பாலாக பிரதான அலுவலகங்களையும், பொருளாதார மையங்களையும் கொண்டு அமைந்துள்ளது. மேலும் புதிய பாதுகாப்பு தலைமையகம் மற்றும் பொலிஸ் தலைமையகம் அடங்கலாக பாதுகாப்பு பிரிவின் முக்கியமான நிறுவனங்களும் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

இந்த மாவட்டத்தின் அண்மைக்கால அபிவிருத்திச் செயற்பாடுகளும் செயற் திட்டங்களும் இந்நாட்டின் எதிர்காலத்தில் முக்கியமான திருப்புமுனையைக் குறிக்கின்றது. நாட்டின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலையான தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு- கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, புதிய களனி பாலம், வெளிவட்ட வீதித் திட்டங்கள், தெமட்டகொட, நுகேகொட மேம்பாலங்கள் மற்றும் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் மேம்பாலத் திட்டங்கள் ஆகியவை நாட்டின் வீதி மற்றும் போக்குவரத்தில் தனித்துவமான அடையாளங்களாகும்.

இம்மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டே மற்றும் சீத்தாவக்க இராச்சியங்கள் அமைந்திருந்ததுடன், பல தொல்பொருள் எச்சங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், தீவின் மிகப்பெரிய நன்னீர் நீர்த்தேக்கமான பொல்கொட ஏரி, பெல்லன்வில-அத்திடிய சரணாலயம் மற்றும் தியவன்னாவ ஆகியவை அதிக உயிரியல் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுச்சூழல் அமைப்புகளாக அமைந்துள்ளன.

பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் வரலாற்றுத் தனித்தன்மைகளைக் கொண்ட இம்மாவட்டம் எதிர்கொள்ளும் சவால்களாக நகரமயமாதல் மற்றும் அதிக மக்கள் தொகை அடர்த்தி என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், வறுமை, குழந்தைகள் மற்றும் தாய்வழி ஊட்டச்சத்து குறைபாடு ஆகியன ஏனைய மாவட்டங்களில் போன்று இந்த மாவட்டத்திலும் காணப்படுகிறது. அதேபோன்று நெடுஞ்சாலை வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள தேசிய வீதி வலையமைப்பின் முதன்மை அம்சங்கள் மாவட்டத்தில் அமைந்திருந்தாலும், கொழும்பு நகரம் உள்ளிட்ட முக்கிய நகரங்களை அண்மித்து காணப்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் போதிய பொது போக்குவரத்து சேவைகள் இல்லாத வீதிகள் காணப்படுதல் போக்குவரத்து துறையில் சவாலாக உள்ளன. அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் மற்றும் நீர்நிலைகள் அடைப்பு காரணமாக, வெள்ளப் பேரிடர் நிலைமைகள் கணிசமாக அதிகரித்துள்ளன. நெற்செய்கை உள்ளிட்ட விவசாய நிலங்கள் வேறு தேவைகளுக்காக மீட்கப்பட்டுள்ளதோடு, விவசாயத்திற்கு பயன்படுத்தக்கூடிய தரிசு நிலங்களை மீள் பயிரிட வேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

கொழும்பு மாவட்ட வரைபடம்

கொழும்பு மாவட்ட வரைபடம்



1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

நிறுவனத்தின் தொலை நோக்கு

நல்லாட்சி மற்றும் நிலையான அபிவிருத்தியுடன் முன்னணி திசையில் ....

நிறுவனத்தின் செயற்பணி

தற்போதுள்ள வளங்களின் முகாமை மூலம் ஆக்கப்பூர்வமான மற்றும் நவீனகரமாக மக்களின் வாழ்வியல் முறைய மேம்படுத்வைதற்கு மாவட்டத்தை வழிநடத்துதல்

நிறுவனத்தின் குறிக்கோள்கள்

- திறமையான மற்றும் பயனுள்ள மாவட்ட அமைப்பைப் பராமரித்தல்.
- பொதுமக்களின் திருப்தியை அதிகரிக்கும் வகையில் பொதுத் துறையில் திறமையான சேவையை உறுதி செய்தல்.
- நன்மைபயக்கும் எண்ணக்கருக்கள், பொறுப்பு, வளங்களை விவேகமாகப் பயன்படுத்துதல், பாரபட்சமற்ற தன்மை, வெளிப்படைத்தன்மை போன்ற விழுமிய அமைப்புகளை அரச சேவையில் தாபித்தல்.
- பொதுத்துறையில் மனித வள முகாமை தொடர்பான கொள்கைகளை செயல்படுத்துதல்.
- அரச அலுவலர்களின் ஓய்வூதியக் கொள்கைகளுக்கு ஏற்ப நிகழ்ச்சித்திட்டங்களைச் செயல்படுத்துதல்.

மாவட்டத்தில் செயல்படும் பல்வேறு அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகளால் செயல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் ஒழுங்கமைத்தல், நிதி மற்றும் நிதி சாரா வளங்களை பயன்படுத்தல் மற்றும் பின்தொடர்தல் நடவடிக்கைகளில் ஒருங்-கிணைப்பாளராக செயல்படுவதன் மூலம் மாவட்டத்தின் மக்களின் நலனையும் அபிவிருத்தியையும் மேம்படுத்துதல்.

1.3 பிரதான பணிகள்

- *மாவட்ட அதிகார வரம்பிற்குள் உள்ள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மாவட்ட பாதுகாப்புக் குழுவின் தலைவராக செயற்படல்.*
- *மாவட்டத்தின் விவசாயம், சுற்றுச் சூழல், இடர் முகாமைத்துவம், தொற்று நோய் தடுப்பு , மகளிர் மற்றும் சிறுவர் குழுக்களின் தலைவராக செயற்பட்டு மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களது பொருளாதார மற்றும் சமூக நல்லிருப்பிற்கு செயற்படுதல்.*
- *மாவட்டத்தில் கலாச்சார, மத மற்றும் ஏனைய காலோசிதமான அரச நிகழ்வுகளின் தலைவராக செயல்படுதல்.*
- *பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளராகச் செயற்படுவதன் மூலம் மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வைச் செய்தல்.*
- *மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலாளர்களுடன் பிராந்திய நிர்வாக நடவடிக்கைகளை வழிநடாத்தும் தலைவராக செயற்படுதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.*
- *நிர்வாகப் பணிகளின் போது உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை அதிகரிக்க நவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் அதற்காக பதவியணியை ஊக்குவித்தல்.*
- *மாவட்ட அதிகார எல்லைக்குள் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றின் பிரதி தலைவராக செயற்பட்டு, குறித்த நிறுவனங்களில் தொலைநோக்கு, குறிக்கோள்கள் மற்றும் பணிகள் நிறைவேற்றும் வகையில் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.*
- *அனைத்து தேர்தல் நடவடிக்கைகளிலும் அதாவது சனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில்களின் போது தேர்தல் ஆணையாளரின் பிரதிநிதியாக, மாவட்ட தெரிவு அத்தாட்சி அலுவலராக செயற்பட்டு நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற தேர்தலை நடாத்துதல்.*
- *மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் உள்ள பதவியணியின் மேம்பாட்டுக்கும் ஆற்றல் அபிவிருத்திக்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.*

1.4. அமைப்பு விளக்கப்படம்



1.5 மாவட்ட செயலகத்தின் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்கள்

1.5.1 பிரதேச செயலகங்கள் பற்றிய அடிப்படைத் தகவல்கள்

தொடர் இலக்கம்	பிரதேச செயலகம்	கிராம அலுவலர் பிரிவுகள்	மொத்த நில அளவு (சதுர கி.மீ.க்கு)	மக்கள் தொகை (2022)	மக்கள் தொகை அடர்த்தி (1 சதுர கி.மீ.க்கு)
1.	கொழும்பு	35	22.47	344,615	15,337
2.	திம்பிரிகஸ்யாய	20	24	253,786	10,574
3.	கொலோன்னாவ	46	28	204,352	7,298
4.	ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே	20	17	115,056	6,768
5.	கடுவெல	57	88	268,694	3,053
6.	மஹரகம	41	38	209,401	5,511
7.	ஹோமாகம	81	121	253,624	2,096
8.	கெஸ்பேவ	73	64	261,435	4,085
9.	சீத்தாவக்க	68	150	121,326	809
10.	பாதுக்க	46	110	69,579	633
11.	தெஹிவளை	15	8	94,840	11,855
12.	இரத்மலானை	13	13	101,816	7,832
13.	மொரட்டுவை	42	20	179,398	8,970
	மொத்தம்	**557**	**703.47**	**2,477,922**	**3,522**

ජන ඝනත්වය (වර්ග කිලෝ මීටර් 1 ට)



1.5.2 கொழும்பு மாவட்டத்தில் உள்ள 13 பிரதேச செயலகங்களினால் மேற்கொள்கின்ற பணிகள் பின்வருமாறாகும்.

i. சட்டரீதியான செயல்பாடுகள்

- பிறப்பு/ விவாகம்/ இறப்புச் சான்றிதழ்கள் உட்பட ஆள் அடையாளத்துடன் தொடர்புடைய செயல்பாடுகள்
- தேசிய அடையாள அட்டைகள் வழங்குதல் மற்றும் மேலொப்பங்களை வழங்குதல்
- அனைத்து வகையான அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நில பரிமாற்றம்
- ஓய்வூதியம் செலுத்துவது தொடர்பான நடவடிக்கைகள்

ii. சமூக நல செயல்பாடுகள்

- வெள்ளம் உள்ளிட்ட அனர்த்த நிவாரண நடவடிக்கைகள்
- முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணிகள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு தனிநபர் உதவிகளை வழங்குதல்

iii. அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் போன்ற நிதி வளமூலங்களைக் கொண்டு பொது கழிப்பறைகள், கிராமப்புற வீதிகள், விவசாய வீதிகள் மற்றும் கால்வாய்கள் போன்ற உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்.

1.5.3 பிரதேச செயலகங்களின் வருடாந்த செயற்திட்டத்தின் முன்னேற்றம்

இல	பிரதேச செயலகம்	2024 ஆண்டு செயற்றிட்டத்தின் முன்னேற்றம்%
01.	கொழும்பு	100
02.	திம்பிரிகஸ்யாய	
03.	கொலன்னாவ	
04.	பாதுக்கை	
05.	ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே	
06.	சீத்தாவக்க	
07.	தெஹிவளை	
08.	இரத்மலானை	99
09.	ஹோமாகம	98
10.	மஹரகம	97
11.	கெஸ்பாவ	
12.	கடுவளை	90
13.	மொறட்டுவை	

1.5.4 பிரதேச செயலகங்களின் அடைவுகள்

1. கொழும்பு பிரதேச செயலகம்

- *அரச அலுவலர்களுக்கிடையிலான நாடக விழாவில் சிறந்த பின்னணி படைப்புக்கான விருது பெற்றுக்கொள்ளுதல்.*
- *"திரிய பிரச" வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஜயவிமன இரண்டு வீடுகளை மக்கள் மயமாக்குதல்.*
- *ஹர்ப்லயின் நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட ஹூணுபிட்டிய "பிவிதுரு" மகளிர் அமைப்பில் திருமதி ஆயிஸா பீபீ சிறந்த சந்தைப்படுத்தல் விற்பனை முகவராகவும் கொழும்பு சந்தைப்படுத்தல் முகாமையாளராகவும் விருதுபெறுதல்.*
- *மட்டக்குளி பிரங்ஸவத்தை இலக்கம் 81/1 A, திருமதி w. சிறியாணியின் வீடு மழை நீர் காரணமாக பாதிக்கப்படுவதால், வீட்டின் நிலப் பகுதியை நிருமாணித்தல்.*
- *கல்வி உதவி தேவைப்படும் 200 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குதல்.*

- *ஓரங்கட்டப்பட்ட பெண்களை அடிப்படையாகக்கொண்ட 17 குடும்பங்கள் பொருட்டு சுயதொழில் வாய்ப்புகள் மற்றும் அதற்கு ஏற்புடையதான உபகரணங்களுடன் வசதிகளை வழங்குதல்.*
- *மாவட்ட அறநெறி பாடசாலை மாணவர்களின் திறன் மதிப்பீடுகளில் மாவட்ட மட்டத்தில் முதலாவது 82 இடங்களைப் பிரிவுக்காக, பிரதிநிதித்துவம் செய்த 40 அறநெறி பாடசாலைகள் பெற்றுக்கொள்ளுதல்*
- *48 ஆவது தேசிய பொது விளையாட்டு விழாவில் கெரம் விளையாட்டுக்கான சம்பியன் பட்டத்தைப் பெற்றுக்கொள்ளுதல்*

11   திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம்

- *அகில இலங்கை உற்பத்தி திறன் விருது, 2 ஆம் இடம் கொழும்பு மாவட்டத்தில் 1 ஆம் இடம் பெற்றுக்கொள்ளுதல்*
- *அலுவலக வளாகத்தில் ஒவ்வொரு மாதமும் தொழில்முயற்சி சந்தை மற்றும் நுகேகொட மேம்பாலத்திற்கு அருகில் விற்பனை சந்தைகளை நடாத்தல்*
- *விதாதா நிலையம் மூலம் அனுப்பி வைக்கப்படும் பிரிவின் இரண்டு தொழில்முயற்சியாளர்களுக்கு சிறந்த உற்பத்தி திறன் சான்றுப்படுத்தல் GMP(Good Manufacturing Product) தரச் சான்றிதழ் வழங்குதல்*
- *ஆதர் சீ க்ளாக் நிலையத்தால் வழங்கப்படும் அமன்பொருள் மற்றும் வன்பொருள் அத்துடன் இலத்திரனியல் ஆகிய கற்கைநெறி சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு பிரிவில் 06 பேர் தொழில்களில் ஈடுபடுதல்.*

- *13 முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு மேலதிக வருமான வழியாக Electronic மற்றும் Hair Cutting பயிற்சி வழங்கப்பட்டு அதற்கான உபகரணங்களை இலவசமாக வழங்குதல்.*
- *நீண்டகால குத்தகை காணிகளில் ரூபா.மில்லியன் 63.73 ஐ அறவிடல்.*
- *தெற்கு கொழும்பு மற்றும் பொரள்ள ஆகிய பிரதேசங்களில் உள்ள சனசமூக சமுர்த்தி வங்கிகள் மூலம் ரூபா 77 மில்லியன் வருமானம் பெறப்பட்டதுடன், அதில் ரூபா.மில்லியன் 14.74 ஆன தேறிய இலாபம் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் ரூபா.மில்லியன் 8 ஆன வட்டி தொகை விருத்தி செய்தல்.*

111. கொலன்னாவ பிரதேச செயலகம்

- சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வருகின்ற பொதுமக்கள் அலுவலகத்தில் காத்திருக்கும் பகுதியில் தங்கள் நேரத்தை அர்த்தமுள்ளதாக செலவிடுவதற்கு, அந்த இடத்தில் ஒரு தொலைக்காட்சியைப் பொருத்துதல்.
- அலுவலகத்தில் பாதுகாப்பு கேமரா அமைப்பு (cctv) மற்றும் இண்டர்காம் அமைப்பைப் பொறுத்துதல்.
- சமுர்த்தி பிரிவு ஊடாக 13 நடமாடும் விற்பனைக் கூடங்களை வழங்குதல்.
- அலுவலக வாகன நிறுத்துமிடத்தின் இரண்டாம் கட்டத்தின் மேம்பாடு.
- கொதட்டுவ சமுர்த்தி வங்கியில் கைமுறை வைப்புத்தொகையை முடித்து, இயந்திர செயல்முறையை மட்டுமே பயன்படுத்துதல்.
- மேல் மாகாணத்தின் முதியோர் போட்டித் தொடரில் புதிய படைப்பு நடனப் பிரிவில் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொள்ளுதல்

1V ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேசச் செயலகம்

- பரவலாக்கப்பட்ட பட்ஜெட் திட்டத்தின் கீழ் 176 திட்டங்களும், கிராமப்புற வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 13 திட்டங்களும், மேல் மாகாண சபை நிதியத்தின் கீழ் 51 திட்டங்களும் 100% பௌதீக முன்னேற்றத்துடன் நிறைவு செய்யப்பட்டன.
- பரவலாக்கப்பட்ட பாதீட்டு நிதியம் மற்றும் மேல் மாகாண சபை நிதியைப் பயன்படுத்தி ராஜகிரிய மேம்பாலம் தொடங்கும் இடத்தில் ஒரு சுயதொழில் விற்பனை நிலையத்தை நிர்மாணித்தல்.
- மிரிஹான - ஜூபிலிகனுவ சந்தி விரிவாக்கத் திட்டத்திற்கு ஏற்புடையதாக நட்டஈடு செலுத்தும் பணிகள் 100% ஆல் நிறைவு செய்தல்.
- கிருலப்பனை - கொடகம வீதியை விரிவாக்குவதற்காக நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் 90% ஆல் நிறைவு செய்தல் மற்றும் இழப்பீட்டுத் தொகை செலுத்தல் 50% ஆல் நிறைவு செய்தல்.
- அலுவலக வளாகத்தில் சோலார் பெனல் அமைப்பை (solar panel system) பொறுத்துதல்.

V. கடுவெல பிரதேச பிரதேசச் செயலகம்

- 2024 ஆம் ஆண்டில் மூன்று முறை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போதிலும், இந்தப் பிரிவில் சுமார் 15 ஏக்கர் தரிசு நெல் வயல்களில் அறுவடைச் செய்வதற்கு முடிந்தது.
- விதாதா வள நிலையத்தால் 30 இற்கும் மேற்பட்ட தொழில்முனைவோரை உருவாக்கி, 4 தொழில்முனைவோரை ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு வழிநடாத்தல்.

- அலுவலர்களால் கடமைக்குப் புறம்பாக தமது நடிப்பு மற்றும் பாடும் திறமைகளை வெளிப்படுத்தி ஏற்பாடு செய்த "ரூ சர பிரபா இசை நிகழ்ச்சி" வெற்றிகரமாக நிறைவடைந்தது.

- மத்திய அரசு மற்றும் மாகாண சபை நிதிகள் மூலம் ரூபா. மில்லியன் 225.2 மதிப்புள்ள 344 அபிவிருத்தி திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

VI . மஹரகம பிரதேச செயலகம்

- சிறிய அளவிலான அல்லது நடுத்தர அளவிலான தொழில்முனைவோரை உருவாக்குதல்.
- ஒதுக்கப்பட்ட நிலையில் காணப்படும் பெண்களை சுயதொழில்களில் ஈடுபடுவதை வலுவூட்டல்.



- பரவலாக்கப்பட்ட/பரவலாக்கப்பட்ட சிறப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒதுக்கீடுகள்/மாகாண சபைகள்/கிராமப்புற வீதிகள் / நிரல் வரிசை அமைச்சின் அபிவிருத்தி திட்டங்களை வெற்றிகரமாக முடிவுறுத்தல்.
  - கங்கொடவில தெற்கு கிராம அலுவலர் பிரிவில் றபர்வத்தை வீதியல் 1 ஆவது குறுக்குத்தெரு, மதிப்பீட்டு வரி இலக்கம் 60 ஐ கொண்ட வீட்டுக்கு அருகாமையில் 100 மீற்றர் முன்னோக்கி கொன்கிரீட் இடர்.
  - பிரகதிபுர கிராம அலுவலர் பிரிவில் ஷீலவணாராமய அபிவிருத்தி செய்தல்.

VII ஹோமாகம பிரதேச செயலகம்

- புதிய அலுவலக கட்டிட வளாகத்தில் பணிகளைத் தொடங்குதல்.
- பிரதேச செயலக வளாகத்தில் தாபிக்கப்பட்ட கிராமப்புற அபிவிருத்தி பயிற்சி நிலையம் NVQ நிலை வரையிலான கற்கைநெறிகளை நடாத்துவதற்கு இயன்ற வகையில் பௌதீக ரீதியாக அபிவிருத்தி செய்தல்.
- கிராம அலுவலர் பிரிவுகளுக்கான புதிய சேவை அரங்குகளை நிர்மாணித்தல்.

V111. கெஸ்பேவ பிரதேச செயலகம்

- சமூக பாதுகாப்பு காப்பீட்டுக்காக அதிக எண்ணிக்கையிலான ஆட்சேர்ப்புகளை அடைந்ததன் மூலம் மாவட்டத்தில் இரண்டாவது இடத்தையும், நிதி இலக்கை அடைந்ததன் மூலம் மாவட்டத்தில் மூன்றாவது இடத்தையும் அடைந்துள்ளது.
- இ-கிராம அலுவலர் திட்டத்தில் தரவு சேகரிப்பின் முன்னேற்றத்திற்கு ஏற்ப, அதிக எண்ணிக்கையிலான நிர்வாக அலகுகளை நிறைவு செய்தல்.
- "கிராம பிரபா" விழாவில் சிறந்த கிராமப்புற அபிவிருத்தி சங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் போட்டியில்
  - மாவட்டத்தில் சிறந்த கிராம அபிவிருத்தி சங்கத்திற்கான முதலாம் இடம் / மேல் மாகாணத்தில் சிறந்த கிராம அபிவிருத்தி சங்கத்திற்கான மூன்றாம் இடம் – படகெத்தறை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கம்.
  - மாவட்டத்தில் சிறந்த கிராம அபிவிருத்தி சங்கம் மூன்றாம் இடம் – பெப்பிலியான மேற்கு, கிராம அபிவிருத்தி சங்கம்
  - கிராம அபிவிருத்தி வார நிகழ்ச்சித்திட்டம்- மாகாணத்தில் இரண்டாம் இடம் ஹொன்னந்தர தெற்கு கிராம அபிவிருத்தி சங்கம் சாதனைகளை அடைதல்.

- விஸ்கம் பிரபா தையல் போட்டியின் ஒட்டுவேலை பிரிவு (patch work), எம்பிராய்டரி பிரிவு, கைவினைப் பிரிவு, பின்னல் பிரிவு மற்றும் தையல் பிரிவில் வெற்றிகளை பெறுதல்.

IX சீத்தாவக்கை பிரதேச செயலகம்

- உறுமய திட்டத்தின் கீழ் தகுதியுள்ள 306 பயனாளிகளுக்கு இலவச அளிப்பு பத்திரங்களைத் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- UN Women மற்றும் Chrysalis ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் மகளிர் தொழில்முனைவோரின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை வழிநடாத்தல்.
- இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட 3089 குடும்பங்களைச் சேர்ந்த 11265 நபர்களுக்கும், சேதமடைந்த 534 வியாபாரங்களுக்கும் உடனடி நிவாரணம் மற்றும் இழப்பீடு வழங்குதல். (ரூபா. 5.1 மில்லியன்)

X பாதுக்க பிரதேச செயலகம்

- அலுவலகம் மற்றும் மலகல மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நடமாடும் சேவை நிகழ்ச்சிகள் மூலம் அடையாள அட்டைகள் இல்லாத 100 பேரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை, அடையாள அட்டைகளை தயாரிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

- சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின் ஆட்சேர்ப்பு ஆண்டு இலக்கான 95 ஐ விஞ்சி 112 ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளுதல். (நிதிசார் பெறுமதி ரூபா. 1,010,843.00)
- ரூபா.மில்லியன் 24.13 ஐ செலவிடப்பட்டு சமய நிலையங்கள், பாடசாலைகள், முன்பள்ளிகள், சங்கங்கள் மற்றும் சுயதொழில் செய்யும் நபர்களுக்கு தேவையான உபகரணங்களை வழங்குதல்.

XI தெஹிவளை பிரதேச செயலகம்

- கொஹுவலை சந்தியில் காணப்பட்ட அதிக வாகன நெருக்கடிக்கு தீர்வாக நிருமாணிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட கொஹுவலை புதிய மேம்பாலத்தின் வேலைகளை முடிவுறுத்தப்படுதல்.

- பிரிவுக்கு சொந்தமான கரகம்பிட்டிய விஜய கல்லூரியின் பயிரிடப்படாத 75 பேர்ச் அளவிலான நிலப் பகுதியல் பயிர் செய்கை பணிகளை மேற்கொள்ளுதல்.
- பாமங்கடை – ஹொரணை வீதி விரிவாக்கல் திட்டம் மற்றும் கிருளப்பனை கொடகம வீதி விரிவாக்கல் திட்டம் தொடங்குதல் மற்றும் நட்டஈடு வழங்குவதை ஆரம்பிக்கப்படுதல்.

X11. இரத்மலானை பிரதேச செயலகம்

- மேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து 02 வீடுகளைப் புனரமைப்பதற்காக ரூபா. 200,000 வழங்குதல்.
- தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக 48 பொது விற்பனை சந்தைகளையும் 02 சிறப்பு விறபனை சந்தைகளையும் நடாத்துதல்.

- *சமுர்த்தி வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 01 புதிய ரன்விமன வீட்டை நிர்மாணித்தல் மற்றும் ஜெயவிமன திட்டத்தின் கீழ் 2 வீடுகளை புதுப்பித்தல்.*

X111. மொரட்டுவ பிரதேச செயலகம்

- *வில்லோரவத்தை தச்சு வேலை உரிமையாளர்களின் சங்கம் இந்த ஆண்டு சௌபாக்யா உற்பத்தி கிராம திட்டத்தின் கீழ் அதிக அளவிலான வருமானத்தை ஈட்டியுள்ளது.*
- *சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் நிலையில் இருந்த RS பெட் உற்பத்தி நிறுவனம் சர்வதேச மட்டத்திற்கு உயர்த்துதல்.*
- *பிரிவில் காளான் உற்பத்தி மற்றும் காளான் தொடர்பான துணை தயாரிப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள், கணக்கியல் பயிற்சி, செலவு மற்றும் நிகழ்நிலை சந்தைப்படுத்தல் முறைகள் குறித்து பயிற்சி அளித்தல், இதன் மூலம் 20 வெற்றிகரமான தொழில்முனைவோரை உருவாக்குதல்.*

1.5.5 ***பிரதேச செயலகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள்***

i. ***கொழும்பு பிரதேச செயலகம்***

- *முறைப்பாடுகளை ஆய்வு செய்வதற்காக வெளிக்கள கடமைகளை மேற்கொள்வதற்கு போக்குவரத்து வசதிகள் இல்லாமை.*
- *போதைப்பொருள் பயன்பாடு அதிகமாக உள்ள பகுதிகளில் சமூக சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் கள ஆய்வுகளை மேற்கொள்ளும்போது பாதுகாப்பு தொடர்பான அபாயங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுதல்.*
- *திடீர் இடர்பாடுகளுடன் கூடிய நிலைமைகளின்போது, உரிய இடங்களை அண்மிப்பதற்கு தேவையான போக்குவரத்து வசதிகள் இல்லாமை.*
- *பிரிவில் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு அணிகளுக்கு ஊட்டச்சத்து கொடுப்பனவுகள் கிடைக்காமை*
- *கிராம அலுவலர் பற்றாக்குறை. (35 பிரிவுகளுக்கு 25 கிராம அலுவலர்கள் மட்டுமே உள்ளனர்)*
- *இயற்கை இடர்களை எதிர்நோக்கிய மக்களுக்கு நட்டஈடு செலுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அத்துமீறல் குடியிருப்பாளர்கள் பலர் இருத்தல்.*

ii திம்பிரிகசாய பிரதேச செயலகம்

- *சேவை பெறுநர்கள் அதிகமான எண்ணிக்கையினருக்கு பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை பூர்த்தி செய்து கொள்ளவேண்டி ஏற்படுதல்.*

- *நகர்ப்புறம் மற்றும் அதிக மக்கள் தொகை கொண்ட பிரிவாக காணப்படுவதால், நலன்புரி சேவைகளின்போது பிரச்சனைகள் குறைவடையும் வகையில் பயனாளிகளைத் தெரிவு செய்தல்.*
- *அரசு சார்பற்ற அமைப்பு அல்லது ஏதேனும் அமைப்பிடமிருந்து நன்கொடை வழங்கும்போது, நலன்கள் போதுமற்றுதன் காரணமாக தகைமையுள்ள பயன்பெறுநரை தெரிவு செய்ய வேண்டி ஏற்படுதல்.*

- பல்லின மக்கள் வாழ்கின்ற பிரிவு என்பதால் தொடர்பாடல் பணிகளின்போது, மொழி பிரச்சினைகள் ஏற்படல்.

ii. **கொலன்னாவ பிரதேச செயலகம்**

- ஆண்டில் இப்பிரிவில் மூன்று முறை பாரிய வெள்ள அனர்த்தங்களை எதிர்நோக்குதல்
- சனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் கடமைகளுடன் அனைத்து கருத்திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றுதல்.
- பதவியணி வெற்றிடங்கள் காணப்படல் (கணக்காளர், முகாமைத்துவ உதவியாளர், கிராம அலுவலர், அலுவலக உதவியாளர்)

iii. **ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகம்**

- அலுவலக நடவடிக்கைகளை இற்றைப்படுத்துவதற்கான மென்பொருள்களுடன் கூடிய தரவு முறைமை தயாரித்தல் மற்றும் தொடர்ச்சியாக இணையத்தள வசதிகளை வழங்குதல்
- அத்தியாவசிய தொழில்நுட்ப உபகரணங்களை பெற்றுக் கொள்ளுதல்.
- அலுவலக மற்றும் கள அலுவலர்களுக்கு பயிற்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.

V. கடுவெல பிரதேச செயலகம்

- தொடர்ச்சியான வெள்ளம் காரணமாக கஷ்டங்களை எதிர்நோக்கும் மக்களை அதிலிருந்து மீட்டல், விவாசய நிலங்கள் மற்றும் ஏனைய பயிர் செய்கைகளுக்கு ஏற்படும் சேதங்களை தவிர்த்தல்.
- வனவிலங்குகளால் (குரங்குகள் மற்றும் மந்திகளால்) ஏற்படும் பயிர்ச்செய்கை சேதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பிரிவில் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வருமானம் அதிகரிப்பதற்காக உற்பத்தித் துறைகளில் ஈடுபடுத்தல்.
- சிறுவர் உரிமைகளை ஊக்குவித்தல் மற்றும் இளம் சமுதாயம் எதிர்கொள்ளும் சமூக பிரச்சனைகளை நிவர்த்தி செய்தல்.

vi மஹரகம பிரதேச செயலகம்

- அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்தும்போது திட்டங்களை அடையாளம் காணுவதற்கு காலம் போதாமை.
- திட்டங்களை செயற்படுத்துகையில் தேவையற்ற துரிதப்படுத்தல் காரணமாக திருத்தங்களை மேற்கொள்வதில் விளைவுத்திறனுக்கு தடையாக அமைதல்.
- தகவல் கட்டமைப்பு பயன்படுத்துகின்ற விடயங்களில் தொழில்நுட்ப பிரச்சினைகள் மற்றும் ஆலோசனைகள் பொருட்டு துரிதமாக தீர்வுகள் கிடைக்கப்பெறாமை.

- அரசபொறிமுறை சுற்றுநிருபங்கள்/ ஆலோசனைகள் மூலம் அறிவுறுத்துவதற்கு முன்னர் ஊடகங்கள் மற்றும் சமூக வலையமைப்புகள் ஊடாக அறிந்துக்கொள்வதால் பொது மக்களின் ஆட்சேபனைகளை எதிர்கொள்ளுதல்

***vii* . ஹோமாகம பிரதேச செயலகம்**

- போதியளவு நிதி ஒதுக்கீடுகள் பெற்றுக்கொள்ளுதல்
- பொருளாதார பிரச்சினைகளுக்கு மத்தியில் கஷ்டங்களை எதிர்நோக்கும் மற்றும் வேலையற்ற நபர்களுக்கு வாழ்வாதார வழிமுறைகளை அமைத்துக்கொடுத்தல்.
- இலத்திரனியல் கட்டமைப்பில் தொழில்பாட்டு இயந்திரங்களை தாபித்தல்.
- புத்தாக்க துறைகளில் குறைந்த ஆற்றல் அபிவிருத்தி
- அலுவலகத்தின் உத்தியோகத்தர்களது தகவல் தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் தொடர்பான அறிவு குறைவாக காணப்படுதல்.

***viii* கெஸ்பேவ பிரதேச செயலகம்**

- வாகன வருமான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் இடத்தில் மற்றும் பதிவாளர் பிரிவில் இடவசதி வரையறுக்கப்பட்டிருத்தல்
- வரையறுக்கப்பட்ட மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்துக்கொண்டு புதிய தொழில்நுட்பம் மற்றும் இற்றைப்படுத்திய மென்பொருளுடன் தரவு கட்டமைப்பை தயாரித்தல்.

***ix.* சீத்தாவக்க பிரதேச செயலகம்**

- அலுவலகத்தில் களஞ்சிய வசதிகள் வரையறுக்கப்படுதல்.
- அலுவலக மற்றும் கள அலுவலர்களின் கணினி தொழில்நுட்பம் தொடர்பான அறிவு இற்றைப்படுத்தாமை
- உதவி பிரதேச செயலாளர், கணக்காளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பதவிகள் காணப்படுதல்.

x. **பாதுக்கை பிரதேச செயலகம்**

- வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கை இடர்களை அதிகமாக எதிர்கொள்ளுதல்.
- அலுவலகத்தில் களஞ்சிய வசதிகள் வரையறுக்கப்படுதல்.

xi தெகிவளை பிரதேச செயலகம்

- 12 வருட கோப்புகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு வசதி இல்லாமை
- தினசரி சேவைகளைப் பெற வரும் மக்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு வாகன நிறுத்துமிடம் இல்லாமை
- தெஹிவளை சந்தியில் காணப்படும் கடுமையான போக்குவரத்து நெரிசல் காரணமாக, அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பணியிடத்தை அடைவதில் சிரமங்களை எதிர்கொள்ளுதல்.

xii. **இரத்மலானை பிரதேச செயலகம்**

- *தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படும் தரவு அமைப்புகளில் உள்ள குறைபாடுகள் மற்றும் போதுமான பயனுள்ள இணைய வசதிகள் இல்லாமை.*
- *கள அலுவலர்களிடம் ஆய்வுகள் மற்றும் தகவல்களை திரட்டுவதற்கு தேவையான தொழில்நுட்ப உபகரணங்கள் இல்லாமை.*
- *அலுவலகத்தின் மின்சுற்றில் ஏற்படும் கோளாறுகள் மற்றும் மின்சார நுகர்வு அதிகரிக்கும் போது போதுமான மின் திறன் இல்லாததால் திடீர் தீ விபத்துகள் ஏற்படுதல்*
- *அலுவலகத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட இடவசதிகளை முகாமைத்துவம் செய்துக்கொண்டு அலுவலகத்தின் அலுவலர்களுக்கு வசதிகளை அளித்தல் மற்றும் சேவைபெறுநர்களுக்கு வினைத்திறனுடன் கூடிய சேவை வழங்குதல்.*

Xiii **மொரட்டுவ பிரதேச செயலகம்**

- *அலுவலக இடத்திற்கு இடையூறாக இருந்த தடைகளுடன் கூடிய பகுதிகளை அகற்றி சேவைபெறுநர்களின் வசதியை மேம்படுத்தும் வகையில் அலுவலக உபகரணங்களை தாபித்தல்.*
- *சிரமங்களுக்கு மத்தியில் கேட்போர்கூடத்தை குளிரூட்டி பொருத்தப்பட்டு வசதிகளுடன் நவீனமயமாக்குதல்.*

1.5.6 **பிரதேச செயலகங்களின் எதிர்கால இலக்குகள்**

i. கொழும்பு பிரதேச செயலகம்

- *புதிய விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம் தயாரித்தல்*
- *தொழில்பாட்டு கூடம் உருவாக்குதல்*
- *உள்நாட்டு கைப்பணி தொழிலின் மேம்பாட்டுக்காக 15 இளைஞர் யுவதிகளை பயிற்றுவித்தல்*
- *பிரிவில் சுற்றுலா கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு முடியுமான இரண்டு இடங்களில் 10 வியாபார வாயப்புகளை மேம்படுத்தல்.*
- *பிரிவில் பழுதாகியுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் 08 வீடுகளை புனரமைத்தல்.*
- *பழுதடைந்துள்ள 50 மலசலகூட முறைமைகளை புனரமைத்தல்*
- *குறைந்த வருமானம்பெறும் மாற்றுத் திறனாளி நபர்கள் மற்றும் பிள்ளைகள் 280 பேர் பொருட்டு உதவி, உபகரணங்கள் வழங்குதல்*
- *செங்குத்தான மற்றும் கிடையான இடங்களில் நகர்புற வீட்டுத் தோட்டங்களை ஆரம்பிப்பதற்காக தொழில்நுட்ப பயிற்சி வழங்குவதற்கு 240 பயனுகரிகள் பொருட்டு 12 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.*

ii. திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம்

- *பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்கி மாவட்ட அபிவிருத்தியில் முதன்மையான பிரிவாக மாற்றுதல்.*
- *குறைந்த வருமானம் பெறும் சமூகத்தை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 300 குடும்பங்களை வலுவூட்டல்.*
- *சிறிய மற்றும் நடுத்தர அளவிலான புதிய தொழில்முனைவோர் மற்றும் தற்போது தொழில்முனைவோர் நடவடிக்கைகளில்*

ஈடுபட்டுள்ள 35 தொழில்முனைவோரின் வருமானத்தை அதிகரிப்பதற்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல்.

- வேலையில்லாத 575 இளைஞர்கள் மற்றும் யுவதிகளை தொழில் வழிகாட்டலுக்கு உட்படுத்தி வேலைவாய்ப்புகளில் ஈடுபடச் செய்வித்தல்
- பிரிவில் உள்ள 450 சிரேஷ்ட குடிமக்களுக்கு சமூக, பொருளாதார மற்றும் உளவியல் நலத் திட்டங்களை நடத்துதல்.

iii. கொலன்னாவ பிரதேச செயலகம்

- அடையாள அட்டை இல்லாத மூத்த குடிமக்களுக்கு புதிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடமாடும் சேவை ஆரம்பித்தல்.
- அலுவலகத்தின் களஞ்சிய திறனை அதிகரித்தல்.
- ஓய்வு பெற்ற சிரேஷ்ட குடிமக்கள் எளிதில் அணுகும் வகையில் ஓய்வூதியப் பிரிவை தரை தளத்தில் அமைத்தல்.
- கர்ப்பிணித் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தும் வகையில் ஊட்டச்சத்துப் பொதிகளை வழங்கும் முறையைத் தொடர்ந்து தீவிரமாக செயல்படுத்துதல்.

iv. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகம்

- அஸ்வெசும 02 ஆவது கட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றுதல்
- 30 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல்.
- பல்வேறு நிதி ஆதாரங்களில் இருந்து பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக முடித்தல்.
- குறைந்த வருமானம் பெறும் 650 குடும்பங்களை சமூக வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வலுவூட்டல்

v. கடுவெல பிரதேச செயலகம்

- குறுகிய காலத்தில் வெள்ள எச்சரிக்கையை கட்டுப்படுத்தல் மற்றும் நீண்டகால நிலையான தீர்வை எட்டுதல்
- அரசாங்கத்தின் புதிய கொள்கையாக நடைமுறைப்படும் Clean Sri Lanka நிகழ்ச்சித்திட்டத்தை கூட்டு பங்களிப்புடன் வெற்றிகரமாக செயற்படுத்தல்.
- பிரிவில் சுயதொழில் செய்பவர்களின் பொருட் உற்பத்திகளின் பொருட்டு ஏற்றுமதிமதி வாய்ப்புகளை மேம்படுத்தல்
- தரிசு நிலங்களை உற்பத்தி நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல் மற்றும் பிரிவின் நிலத்தினை நிலையான மற்றும் பயனுள்ள வகையில் விவசாய மற்றும் தொழில்நுட்ப உற்பத்திகளுக்காக பயன்படுத்துதல்.
- பிரிவில் போதைப்பொருள் பாவனையைக் குறைப்பதற்கும் போதைக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து மீள்வதற்கும் முழு ஆலோசனைப் பங்கேற்பை வழங்குதல்.
- களனி கங்கை, ஏரிகள் மற்றும் நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரித்தல்

vi. மஹரகம பிரதேச செயலகம்

- *E POP நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 200 பதிவுச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு திட்டமிடல். 2024 திசெம்பர் தொடக்கம் ஒவ்வொரு பிறப்பையும் தரவு கட்டமைப்பில் உள்ளடக்கி இற்றைப்படுத்தி பராமரித்தல் மற்றும் 2021 தொடக்கம் இறப்புச் சான்றிதழ்களை தரவு கட்டமைப்பில் உள்ளடக்குதல்.*
- *பிரதேச ஒருங்கிணைப்புக் குழு/ பிரதேச விவசாய குழு ஆகியவற்றில் முன்வைக்கப்படும் பொது மக்களின் பிரச்சினைகளுக்கு துரித தீர்வு வழங்குதல்*
- *பொதுமக்களுக்கு நற்பு முறையில் சேவைகளை வழங்குவதற்காக அலுவலர்களிடத்தில் நேர் மறையான உளப்பாங்கினை மேம்படுத்துவதற்கு பயிற்சி திட்டங்களை இற்றைப்படுத்தல்.*

vii. ஹோமாகம பிரதேச செயலகம்

- *புதிய அலுவலக வளாகத்திற்கு தேவையான அலுவலக உபகரணங்களை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பௌதீக அபிவிருத்தி நடவடிக்கைகளை முடிவுறுத்தல்*
- *புதிய 05 "சேவை பியஸ" நிறுவுதல்*
- *மான்களின் பிரச்சினைக்கு பயனுள்ள தீர்வை வழங்குதல்*
- *அலுவலக கடித ஆவணங்களின் முகாமைத்துவத்தை மென்பொருள் தரவு கட்டமைப்பு ஊடாக மேற்கொள்ளுதல்.*

viii கெஸ்பேவ பிரதேச செயலகம்

- *போஷாக்கு மற்றும் உளவியல் சமூக நிகழ்ச்சித்திட்டங்களை மாதாந்தம் செயற்படுத்தல்*
- *உற்பத்தி, பொதியிடல், சந்தைப்படுத்தல், சிறிய வியாபாரங்களின் முகாமைத்துவம் , நிதி, கல்வி அறிவு ஆகிய துறைகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்*
- *தரிசு வயல்களை மீள அறுவடை செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறை பயன்பாட்டு காணிகளை பயிரிடும் நிகழ்ச்சித்திட்டங்களை பிரிவு மட்டத்தில் நடைமு றைபடுத்தல்.*
- *கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்*
- *பல்வேறு நிதி ஆதாரங்களில் இருந்து பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக முடித்தல்.*

*ix.*சீத்தாவக்க பிரதேச செயலகம்

- *வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10 பயன்பெறுநர்களுக்கு வீடுகளை வழங்குதல்.*
- *அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டம் பொருட்டு விண்ணப்பம் செய்த 3,387 வீடுகளை ஆய்வு செய்தல்*
- *ஈ பொபியுலேஷன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய பிறப்பு வழங்கும் திட்டம் ஆரம்பித்தல்.*
- *பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பின்தங்கிய மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதல்.*

x. பாதுக்கை பிரதேச செயலகம்

- *அஸ்வெசும திட்டத்திற்கு விண்ணப்பித்த 1618 வீடுகளை ஆய்வு செய்தல்.*
- *இ-பொபியுலேஷன் திட்டத்தின் கீழ் தேசிய பிறப்புச் சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்*
- *பல்வேறு நிதி ஆதாரங்களில் இருந்து பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்தல்.*

xi. தெகிவளை பிரதேச செயலகம்

- *பிரதேச செயலகத்திற்கான திட்டமிடப்பட்ட புதிய கட்டிடத்தை கட்டுவதற்கான நடவடிக்கைகளுக்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உதவியைப் பெறுதல்.*
- *கடற்கரை வீதியின் மூன்றாம் கட்டம் தெஹிவளை ரயில் நிலையத்திற்கு அருகில் இருந்து ஓபன் பிளேஸ் வரையிலான பகுதியின் கட்டுமானப் பணிகளைத் தொடங்க தேவையான ஆரம்ப நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்.*

xii. இரத்மலானை பிரதேச செயலகம்

- *பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் அபிவிருத்தி துறைகளில் மாவட்டத்தின் முதன்மையான பிரிவாக மாறுதல்.*
- *சிறு மற்றும் நடுத்தர புதிய தொழில்முனைவோரின் வருமானத்தை அதிகரிக்க 10 தொழில்நுட்ப பயிற்சித் திட்டங்களை நடாத்துதல் மற்றும் அவர்களுக்கு சந்தை வாய்ப்புகளை அறிமுகப்படுத்துதல்.*
- *பல்வேறு நிதி ஆதாரங்களில் இருந்து பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்தல்.*

xiii. மொறட்டுவ பிரதேச செயலகம்

- *மொரட்டுவை தெற்கு வலயத்தில் புதிய காலி வீதிக்கும் பழைய காலி வீதிக்கும் இடையே பல இடை வழிகள் மழை நீரில் மூழ்குவதைத் தடுக்கும் திட்டத்தை செயல்படுத்துதல்.*
- *பொல்கொட நதியை சுத்தம் செய்து, பொருளாதார ரீதியாக பயனுள்ள சுற்றுலா தலம் வரைஅந்த நீர்த்தேக்கத்தை மேம்படுத்துதல்.*
- *ஜப்பான் ஜபர தாவரங்களைப் பயன்படுத்தி கைவினைத் தொழிலுக்கான தொழில்முனைவோரை உருவாக்குதல்.*
- *பொருபன சந்தி முதல் குருச சந்தி வரை காலி வீதியின் நடுவில் உள்ள தீவில் சுற்றுச்சூழல் அபிவிரித்தி திட்டத்தை செயல்படுத்துதல்.*

2 ஆம் அத்தியாயம்

முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு

பின்வரும் துறைகளின் கீழ் மாவட்ட செயலகத்தால் எட்டப்பட்ட விசேட சாதனைகள், பல்வேறு விடய துறைகளுக்கு ஏற்புடையதாக பணிகளை நிறைவேற்றும் போது எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் ஆகியன இவ் அத்தியாயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

- நிறுவன, நிர்வாக மற்றும் நிதியிடல்
- பொருளாதார உட்கட்டமைப்பு மேம்பாடு
- உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து
- தொழில்முயற்சி அபிவிருத்தி
- மனித வள மேம்பாடு
- நுகர்வோர் பாதுகாப்பு
- சமூக பாதுகாப்பு
- சிறுவர்கள் மற்றும் மகளிர் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு
- சமூக அபிவிருத்தி
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பயனுள்ள நிலப் பயன்பாடு
- மத மற்றும் கலாச்சார

2.1 சிறப்பு சாதனைகள்

2.1.1 நிறுவன, நிருவாக மற்றும் நிதியிடல்

- 2024 கணக்காய்வு திட்டத்தின் படி 42 கணக்காய்வு சோதனைகளுக்கு கூடுதலாக 01 கணக்காய்வு சோதனை மேற்கொள்ளுதல்.
- ஹோமாகம பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தின் மூன்று மாடிகளின் வேலைகளை முடிவுறுத்தப்பட்டு அலுவலகப் பணிகளைத் தொடங்குதல்.
- பிரதேச செயலகங்கள் தொடர்பான திட்டங்களுக்கு தேவையான கண்காணிப்பு மற்றும் கொள்முதல் பணிகளை மேற்கொண்டு திட்டங்களை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அரசு நிறுவனங்களில் மேம்படுத்தப்பட வேண்டிய 30 உற்பத்தி செயல்முறைகளை மேம்படுத்துதல்.
- உற்பத்திதிறன் மற்றும் புத்தாக்கம் குறித்து, 2 அடிப்படை சான்றிதழ் கற்கைநெறிகளை நடாத்துதல்.
- 2017.01.26 அன்று நடைபெற்ற அரசு கணக்குகள் பற்றிய குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட ஒன்பது விடயங்களில் ஏழு விடயங்களைத் தீர்க்கப்படுதல்.
- மாவட்ட செயலகத்தின் பிரதான களஞ்சியத்திலிருந்து பிரதேச செயலகங்களுக்கு களஞ்சியப் பொருட்கள் மற்றும் படிவங்களை வழங்குவதற்கு களஞ்சிய முகாமைத்துவ அமைப்பை நிறுவுதல்.

2.1.2 பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

- மக்கள் தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு - 2024 பட்டியல் படுத்தல் பணிகள் 13 பிரதேச செயலக பிரிவுகளிலும் வெற்றிகரமாக முடிவுறுத்தல்.
- ஆண்டிற்குரியதாக கொழும்பு மாவட்டத்தில் 240 தொழிற்படை மாதிரி ஆய்வுகளில், 78 நெல் மாதிரி ஆய்வுகளில் மற்றும் 8 பிரதேச செயலக பிரிவுகளில் விலை சேகரிப்பு தொடர்பான தகவல்களை வெற்றிகரமாக சேகரித்தல்.
- மாவட்ட செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்களின் அஞ்சலுக்கு ஒரே மாதிரியான தரவு அமைப்பை அறிமுகப்படுத்துதல்.
- மாவட்ட செயலக விழாக்கள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளுக்கு தேவையான அழைப்பிதழ்கள், சான்றிதழ்கள், பின்னணி வடிவமைப்புகள் போன்றவற்றை தயாரித்து அரசு செலவுகளை குறைத்தல்.

- சூரிய சக்தியை ஊக்குவிக்கும் நோக்கில் சூரிய பெனல் வழங்கும் 47 திட்டங்களை செயல்படுத்துதல்.
- மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கள் மற்றும் துணை குழுக்களை நடத்தி கொழும்பு மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை தீர்த்தல்.
  - ஹோமாகம வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கலகாதெனிய கால்வாயில் கழிவு நீர் வெளியேற்றம்.
  - ஒருகொடவத்த முதல் கடுவெல அதிவேக நெடுஞ்சாலை வரை உள்ள பழைய நீர் குழாய்களை அகற்றி புதிதாக அமைக்கும் திட்டம்

2.1.3 உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு

- விவசாய புத்தாக்க நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக விவசாய தொழில் முனைவோர் கிராமங்கள் திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் 14 பாதுகாப்பான வீடுகள் மற்றும் 19 காளான் வீடுகளை நிர்மாணித்தல்.
- வணிக தூரியன் அறுவடை விரிவாக்கத் திட்டத்தின் கீழ் 9.75 ஏக்கரில் தூரியன் பயிர்ச் செய்கை மேற்கொள்ளுதல் ("இளைஞர் வேளாண்-தொழில்முனைவோர் கிராமத் திட்டத்தின் கீழ், சீதாவாக்க மாவட்ட அலுவலகத்தின் அஸ்வத்த கிராம அலுவலர் பிரிவில் 1.75 ஏக்கர் துரியன் சாகுபடியும் ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.)
- விவசாய புத்தாக்க திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக விவசாய தொழில் முனைவோர் கிராமங்கள் திட்டத்தின் கீழ் அன்னாசி செய்கையின் ஊக்குவிப்பு திட்டத்திற்கு 22.75 ஏக்கரில் அன்னாசி செய்கை மேற்கொள்ளுதல். செய்கையின் பாதுகாப்பிற்காக சூரிய பெனல் மின் வேலிகளை 76 ஏக்கர்களுக்கு வழங்குதல்.
- உர உற்பத்தி, இறக்குமதி மற்றும் கலவை தொடர்பாக 15 புதிய உரிமங்கள் மற்றும் 24 உரிமங்களின் புதுப்பித்தல்கள் மேற்கொள்ளுதல்.
- உர விற்பனைக்கு 31 சில்லறை விற்பனை நிலையங்களுக்கு பதிவு உரிமங்கள் வழங்குதல்.
- குறிப்பிட்ட பருவம் தொடங்குவதற்கு முன்னர் முதலாவது உரத் தேவையை கணக்கிட்டு தேசிய "உரத் தேவை" தயாரிப்பதற்காக தேசிய உர செயலகத்திற்கு தொடர்புடைய தரவுகளை அனுப்புதல்.
- உரம் தொடர்பான 123 களஞ்சிய ஆய்வுகளை நடத்துதல்.

2.1.4 தொழில்முயற்சி அபிவிருத்தி

- 474 பெண்களை பொருளாதார ரீதியாக வருவூட்டல்.
- 494 சுய வேலைவாய்ப்பு பொருட்கள் விற்பனை சந்தைகளை நடத்துவதன் மூலம் மற்றும் பெண்களின் சுய வேலைவாய்ப்பு பொருட்களுக்கு சந்தை வசதிகளை வழங்குதல்.
- குழு திட்டங்களாக துப்புரவு சேவை மற்றும் சவர்க்கார உற்பத்தி வியாபாரம் ஹோமாகம பிரதேச செயலக பிரிவில் தொடங்குதல்.
- சுயதொழில் செய்யும் பெண்களின் பொருட்களை விற்பனை செய்வதற்கு 19 கடை அறைகளைக் கொண்ட நிரந்தர விற்பனை நிலையங்களை தொடங்குவதற்கு ஆரம்ப நடவடிக்கைகளை செயல்படுத்துதல்.
- "Super Fair" "சூப்பர் ஃபேர்" விற்பனை சந்தைகள் மற்றும் கண்காட்சிகளை நடத்துவதன் மூலம் 461 தொழில்முனைவோருக்கு ரூபா. 10,607,687.00 வருமானம் வழங்குதல்.
- கொழும்பு மாவட்ட தொழில் முனைவோர் சங்க உறுப்பினர்களுக்கு மாகும்புர பல்நோக்கு அதிவேக போக்குவரத்து நிலையத்தில் ஒவ்வொரு மாதமும் விற்பனை கண்காட்சிகளை நடத்த வாய்ப்புகளை வழங்குதல்.
- கெஸ்பேவ பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புடன் தொழில் முனைவோர், வாங்குபவர்கள், விற்பனையாளர்கள் சந்திப்புக்காக கலந்து கொண்ட 68 தொழில் முனைவோரில் 52 பேருக்கு விற்பனை வாய்ப்புகளை வழங்குதல்.

- 66 கிராம அலுவலர்களுக்கு 10 நாள் சேவையாரம்ப பயிற்சி திட்டத்தை வெற்றிகரமாக முடித்தல்.
- மாவட்ட செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்களின் ஓட்டுநர்களுக்கு ஒருகொடவத்த ஜப்பான் தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சிப் பட்டறை வெற்றிகரமாக நடத்துதல்.
- 100 தொழிலாளர்களுக்கு கணினி பயிற்சி மற்றும் இணைய வர்த்தக பயிற்சி அளித்தல்.
- மின்னணு பயிற்சிக்கு 08 பேர் மற்றும் கணினி வன்பொருள் பயிற்சிக்கு 05 பேர் ஆர்தர் சி கிளார்க் நிலையத்தில் பயிற்றுவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்குதல்.

2.1.5 மனிதவள அபிவிருத்தி

- வெளிநாடு செல்லும் நோக்கத்தை அடைவதற்காக புலம்பெயர்ந்த குடும்பங்களுக்கான 27 அபிவிருத்தி திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- வெளிநாட்டு தொழிலாளர்களை மீண்டும் சமூகமயமாக்குவதற்கும், மீண்டும் இடம்பெயர்வதைத் தடுப்பதற்கும் 12 பேருக்கு ரூபா. 50,000 சுய வேலைவாய்ப்பு மானியங்கள் வழங்குதல்.
- புலம்பெயர்ந்த குடும்பங்களின் 647 பயனாளிகளுக்கு கல்வி உதவி வழங்குதல்.
- நகர்ப்புற தோட்ட வீட்டுப் பகுதிகளைச் சேர்ந்த 164 பாடசாலை இடைநின்ற இளைஞர் யுவதிகளை தொழில் பயிற்சி கற்கைநெறிகளுக்கு அனுப்பி வைக்கப்படுதல்.
- 10286 பயனாளிகளுக்கு 258 தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- தொழில் பயிற்சி கற்கைநெறிகள் மற்றும் பயிலுநர் தொழிற்பயிற்சிக்காக 1319 புதிய பயிற்சியாளர்களை அனுப்புதல்.
- முன் அறிவு மதிப்பீடு (RPL) மூலம் தேசிய தொழில் தகுதி (NVQ) சான்றிதழ்களைப் பெறுவதற்கு 382 பேர்களை அனுப்பி வைத்தல்.
- 4 தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலம் 474 பேருக்கு தொழில் வழிகாட்டுதல்.
- நேரடி வேலைகளுக்கு அனுப்பப்பட்ட 191 பேருக்கு தொழில் வழிகாட்டுதல் வழங்குதல்.
- மாவட்ட வேலை கண்காட்சி திட்டத்தை நடத்தி 58 வேலை வாய்ப்புகளை வழங்குதல்.
- 9 பிரதேச தொழிற் சந்தை கண்காட்சி திட்டங்களை ஒருங்கிணைத்து நடத்துதல்.
- RPL முறையின் கீழ் திறன் சான்றிதழ்களை வழங்குவதற்கு 54 பேரை அனுப்பி அவர்களை வெளிநாட்டு வேலைகளுக்கு ஊக்குவித்தல்.
- வாடிக்கையாளர்களின் சிக்கலான சூழ்நிலைகளை மதிப்பிடுவதற்கு உளவியல் மதிப்பீட்டு அளவுகோலை பயன்படுத்துதல்.

2.1.6 நுகர்வோர் பாதுகாப்பு

- பொருளாதார நெருக்கடி காரணமாக குறைந்த அளவு வெடிபொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டாலும், 225 வெடிமருந்து பொருள் அனுமதிகள் மற்றும் 50 உரிமங்களுக்கு இடையே இறக்குமதி செய்யப்பட்ட வெடிமருந்து பொருட்களை விகிதாசாரமாக விநியோகிப்பதன் மூலம் தொழில்கள் மற்றும் சேவைகளை தொடர்ந்து நடத்துதல்.
- வாடிக்கையாளர் தகவல் அமைப்பை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் மூலம் 225 வெடி மருந்து பொருட்களுக்கான அனுமதிகள் மற்றும் 50 உரிமங்களை விரைவாக வழங்குதல்.
- மாவட்டத்தில் வெடிமருந்துப் பொருள் களஞ்சியங்களை நவீனமயமாக்குதல்.
- 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் எடை மற்றும் அளவீட்டு கருவிகளின் சரிபார்ப்பு குறித்த வர்த்தகர்களின் விழிப்புணர்வை 32% அதிகரித்தல்.
- 2023 உடன் ஒப்பிடும்போது, முயற்சித்த சோதனைகள் மற்றும் வழக்குத் தொடரல்களின் எண்ணிக்கையில் 200% அதிகரிப்பால் வர்த்தகர்களால் நுகர்வோருக்கு ஏற்படும் சிரமத்தை கணிசமாகக் குறைத்தல்.

- எடை மற்றும் அளவீட்டு கருவிகளின் சரிபார்ப்பு குறித்து வணிகர்களுக்குத் தெரிவிப்பதன் மூலமும், பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் சோதனைகளை நடத்துவதன் மூலமும் சரிபார்ப்பு வருவாயை 25% அதிகரித்தல்.

2.1.7 சமூகப் பாதுகாப்பு

- சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தில் 816 நபர்களை உறுப்பினர்களாக்குதல்.
- 2024 ஆம் ஆண்டில் 60 ஓய்வூதியங்களை தொடர்ச்சியாக வழங்குதல்.
- 545 ஆதரவற்ற குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ரூ. 6500/- மதிப்புள்ள உலர் உணவு பொருட்களை விநியோகித்தல்.
- "ஸ்வஷக்தி அபிமானி" 2024 போட்டித்தொடரில் 50 க்கும் குறைவான பணியாளர்களைக் கொண்ட நிறுவனங்களின் சேவை தருநர்களை மதிப்பிடும் போட்டியில் ஹோமாகம சஹனோதய அறக்கட்டளை தேசிய அளவில் முதலிடம் பிடித்தல்.
- தகுதி பெற்ற 18 முதல் 35 வயது வரை உள்ள 16 இளைஞர் யுவதிகளுக்கு தனியார் துறையில் நிரந்தர வேலை வாய்ப்புகள் வழங்குதல்.
- 3 சமூக மத்தியஸ்த்த சபைகளுக்கு 90 உறுப்பினர்களை நியமித்தல்.
- 20 பாடசாலை மத்தியஸ்த்த நிகழ்ச்சிகளை நடத்தி சுமார் 500 மாணவர்களுக்கு மத்தியஸ்தப்படுத்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

2.1.8 சிறுவர்கள் மற்றும் மகளிர் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு

- வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட 58 பெண்கள் மற்றும் 39 குழந்தைகளுக்கு தற்காலிக தங்குமிடம் வழங்குதல்.
- கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ரூ. 45,000.00 மதிப்புள்ள ஊட்டச்சத்து பொதி வழங்குதல் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள கர்ப்பிணி தாய்மார்களுக்கு உலர் உணவு பொட்டலங்கள் வழங்குதல் அத்துடன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- பாலர் பாடசாலை குழந்தைகளுக்கு காலை உணவு வழங்குதல்.
- பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதந்தோறும் ரூபா. 5,000.00 வழங்கும் திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் நிதி ஒதுக்கீடு இல்லாத ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- பாலர் பாடசாலைகளுக்கு நீர் சுத்திகரிப்பு கருவிகளை வழங்குதல்.
- நிதி ஒதுக்கீடு இல்லாமல் இருக்கும் பாலர் பாடசாலை பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- ஒதுக்கப்பட்ட நிலையில் உள்ள சமூகத்தின் பிள்ளைகளது உரிமைகளை பாதுகாப்பதற்காக பிறப்பு சான்றிதழ் வழங்கும் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட 80 பிள்ளைகளில் 55 பிள்ளைகளுக்கு பிறப்பு சான்றிதழ்களை தயாரித்தல்.
- 57 சிறுவர் பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துதல்.
- பொருளாதார சிரமங்களால் தொடர்ந்து பாடசாலைகளுக்கு செல்லாத 1185 பிள்ளைகளுக்கு தேவையான கல்வி உபகரணங்களை வழங்குதல் மற்றும் ரூபா. 2,066,000.00 கல்வி மானியம் வழங்குதல்.
- சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்தல், பேரிடர் முகாமைத்துவம் மற்றும் இளம் வயது கர்ப்பங்களை குறைத்தல் குறித்து பொது மக்களுக்கு 1200 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் அதன் மூலம் 27288 நபர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

2.1.9 சமூக அபிவிருத்தி

- இடர்களால் பாதிக்கப்பட்ட 39,938 குடும்பங்களைச் சேர்ந்த 145,471 நபர்களுக்கு உடனடி இடர் நிவாரணம் வழங்குதல்.

- இடர்களால் பாதிக்கப்பட்ட 1,712 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வீடுகள் மற்றும் வியாபார இடங்களை முறையாக மீட்டெடுத்தல்.
- 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட குடிமக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக, கொமொட்களுடன் கூடிய கழிப்பறைகள், படுக்கைகள், மெத்தைகள், படுக்கை விரிப்புகள், மின்விசிறிகள் போன்றவற்றை வழங்குதல் மற்றும் அறையில் டைல்ஸ் பதித்தல் போன்ற நலன்புரி நடவடிக்கைகளுக்காக 200 பேருக்கு ரூபா.10,000,000.00 உதவி வழங்குதல்.
- சுயதொழில் உதவித் திட்டத்தின் கீழ் 15 சிரேஷ்ட குடிமக்களுக்கு ரூபா. 750,000.00 உதவி வழங்குதல்.
- நிரந்தர வீடுகள் இல்லாத 3 சிரேஷ்ட குடிமக்கள் குடும்பங்களுக்கு 3 நிரந்தர வீடுகளை நிருமாணிப்பதற்காக ரூபா. 2,100,000.00 ஆன உதவி வழங்குதல்.
- சிரேஷ்ட குடிமக்கள் குழு உறுப்பினர்களின் புனித யாத்திரைக்காக 26 குழுக்களுக்கு ரூபா.1,950,000.00 நிதி உதவி வழங்குதல்.
- சமுர்த்தி திணைக்கள நிதியின் கீழ் குறைந்த வருமானம் கொண்ட 45 வீடுகளின் பணிகளை முடிவுறுத்தல்
- சர்வதேச புகையிலை மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு 2024 ஆம் ஆண்டில் கொடி விற்பனை வருமானமாக ரூபா.13,005,742.00 திரட்டுதல்.
- விற்பனைத் திட்டத்தின் கீழ், அஸ்வெசும் பயனாளிக் குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு, Mini Food City - 01 திட்டம், RPL முறையின் கீழ் NVQ சான்றிதழ் வழங்கும் 13 திட்டங்கள், தொழில் வழிகாட்டுதல் பயிற்சி 13 திட்டங்கள், தொழில்முனைவோருக்கான திறன் மேம்பாட்டு 06 திட்டங்கள், தொழிற்பயிற்சி வாய்ப்புகளுக்கான தொடர்புபடுத்தும் 06 திட்டங்கள் நடாத்துதல்.

2.1.10 சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பயனுள்ள காணிப் பயன்பாடு

- ஹோமாகம, சீதாவாக்க மற்றும் கேஸ்வே பிரதேச செயலகப் பிரிவுகளில் பயன்படுத்தப்படாத 30 விவசாய காணி நிலங்களில் மண் மற்றும் நீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்தல்.
- "கொழும்பு மாவட்டத்தில் சட்டவிரோத நில ஆக்கிரமிப்பால் நாட்டிற்கு இழக்கப்படும் வன வளங்கள்" எனும் தலைப்பில் அடையாளம் காணப்பட்ட சிறப்பு நில பயன்பாட்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆய்வு தகவல்களைக் கொண்ட அறிக்கையை தயாரித்தல்.
- தேசிய காணிப் பயன்பாட்டு ஆய்வின் கீழ் கொழும்பு மாவட்டத்தை உள்ளடக்கிய 1:50,000 வரைபடங்கள் 36 ஐ புதுப்பித்தல்.
- "Zero Plastic" மாதிரி மாவட்டமாக நியமிப்பது தொடர்பாக, உள்ளூராட்சி மன்றங்கள், அரசு மற்றும் பகுதி அரசு நிறுவனங்களை ஒன்றிணைத்து முன்மொழியப்பட்ட செயல் திட்டத்தை இலங்கை பாராளுமன்றத்தின் இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்தி துறைசார் மேற்பார்வை குழுவிடம் சமர்ப்பித்தல்.
- மாவட்டத்தில் உள்ள தொழில்கள் பற்றிய தொழில்துறை ஆய்வை நடத்துதல்.

2.1.11 மத மற்றும் கலாச்சார அலுவல்கள்

- தேசிய இலக்கிய விழாவில் அதிக வெற்றிகளை பெறுதல்.
- மாவட்டத்தில் உள்ள அனைத்து கலை நிறுவனங்களையும் ஒன்றிணைத்து கலை நிகழ்ச்சியை நடத்துதல்.
- சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அதற்கு இணையாக வெற்றிகரமான மாவட்ட மகளிர் தின கொண்டாட்ட விழாவை ஏற்பாடு செய்து நடத்துதல்.
- மொழி வாரத்திற்கு இணையாக10 சிங்களம், முஸ்லிம், தமிழ் பாடசாலைகளைச் சேர்ந்த 250 மாணவர் தலைவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- அரசு மொழிகளை மேம்படுத்துவதற்காக சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஓரங்க நாடகப் போட்டி மற்றும் குறும்படப் போட்டியை நடத்துதல்.

- அரசு மொழி கொள்கையை செயல்படுத்துவதற்காக மொழி திட்டமிடல் வசதி அளித்தலின் கீழ், மூன்று நாள் திட்டத்தை நடாத்துதல்.
- சீதாவாக்க பிரதேச சபையின் பிலிப் குணவர்தன நூலகத்திற்கு ரூபா. 100,000.00 நிதி ஒதுக்கீட்டில் மும்மொழி புத்தகங்களை வழங்குதல்.
- 60 தமிழ்/சிங்கள மொழி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- 13 மொழி கற்கைநெறிகளை வெற்றிகரமாக முடிவுறுத்தல்

2.2 சவால்கள்

2.2.1 நிறுவனம், நிர்வாகம் மற்றும் நிதியிடல்

- அலுவலர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு லீவு எடுப்பதால் போதுமான அலுவலர்கள் இல்லாமையால் சிக்கலான சூழ்நிலைகளைக் குறைத்து, அலுவலகப் பணிகளை நிறைவேற்றுதல்
- 2 தேர்தல் பணிகள் காரணமாக அலுவலகப் பணிகளை முறையாகச் செய்தல்.
- குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செய்ய வேண்டிய அவசரப் பணிகளும் நாளாந்த அலுவலகப் பணிகளுடன் முகாமைத்துவம் செய்துக்கொண்டு மேற்கொள்ளுதல்.
- சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றின் மத்தியில் கடமைகளை நிறைவேற்றும் அதே வேளையில், உள்ளக கணக்காய்வு பணிகளைச் செய்தல், மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் 04 மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் 52 ஐ நடாத்துதல்.
- 51 செலவினத் தலைப்புகள் மற்றும் 15 வருவாய் தலைப்புகளில் சுமார் 75% ஆன அளவினை கணக்காய்வு செய்வதற்கு 07 அபிவிருத்தி அலுவலர்கள் போதாமை.
- அலுவலகப் பதவியணியின் இணைய பயன்பாடு, கணினி செயல்பாடு, நவீன தொழில்நுட்ப பயன்பாடுகள் பற்றிய அறிவு திருப்திகரமாக இல்லாமை மற்றும் அறிவை மேம்படுத்த தேவையான தொழில்நுட்ப உபகரணங்களின் பற்றாக்குறை காணப்படுதல்.
- கணக்கு பிரிவில் இடமாற்றம், வெளிநாடு செல்லுதல் மற்றும் பதவி உயர்வு போன்ற விடயங்களால் 06 வெற்றிடங்கள் கணப்படும் நிலையில், தினசரி அலுவலகப் பணிகளை திறம்பட மற்றும் திறமையாகச் செய்தல்.

2.2.2பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்

- அலுவலர்களின் வழக்கமான நாளாந்த கடமைகளுக்கு மேலதிகமாக, 2024 மக்கள் தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பின் பணிகளும், விவசாய கணக்கெடுப்பு, பொருளாதார கணக்கெடுப்பு மற்றும் வீட்டு அலகு வருமானம் மற்றும் செலவு கணக்கெடுப்பு ஆகியவற்றை மேற்கொள்ளுதல்
- தொடர்ச்சியான இயற்கை பேரழிவு சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதால், திட்டங்களுக்கு அப்பாற்பட்டு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

2.2.3 உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து

- திட்டங்கள் 50% பயனாளிகளின் பங்களிப்பில் செயல்படுத்தப்படுவதால், பொருளாதார சிரமங்கள் காரணமாக பயனாளிகளின் விருப்பம் மாறுதல்.
- திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது, பயனாளிகளின் பல்வேறு சிரமங்கள் காரணமாக திட்டங்களிலிருந்து வெளியேறுவதால், திட்டங்கள் பாதியில் நிறுத்தப்பட வேண்டிய நிலை ஏற்படுதல்.
- மூன்றாம் காலாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டாலும், திட்டப் பணிகள் ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 31 ஆம் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்பதால், அதிக எண்ணிக்கையிலான பயனாளிகளை திட்டப் பணிகளை முடிவுறுத்துவதற்கு தொடர்ந்து ஊக்குவிக்க வேண்டிய நிலை ஏற்படுதல்.

- உரங்களின் தரத்தை பரிசோதிப்பதற்கு தொடர்ந்து கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால், மாவட்டத்தின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்வதற்கு வாகனமொன்றை இணைத்துக்கொள்ளுதல். (தற்போது தனிப்பட்ட வாகனங்களை பயன்படுத்தி களப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன)

2.2.4 தொழில்முயற்சிகளின் மேம்பாடு

- பொருளாதார நெருக்கடியினால் செலவினம் அதிகரித்தல் மற்றும் மூலப்பொருட்களின் விலை உயர்வு காரணமாக குறைந்த வருமானம் பெறுபவர்களின் சிறிய அளவிலான கருத்திட்டங்களை பராமரித்தல்.
- மூலப்பொருட்களின் விலை அதிகரித்தலின் காரணமாக தொழில்முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் உற்பத்தி பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- அதிக வாழ்க்கைச் செலவு காரணமாக சந்தை வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்படுவதால், புதிய சந்தை வாய்ப்புகளை தேடிக் கொடுப்பதற்கு முயற்சி எடுத்தல்.
- பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை உயர்வு காரணமாக, நுகர்வோர் அத்தியாவசிய பொருட்களை மட்டும் நுகர்வதால், அலங்கார பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் போன்ற பிற பொருட்களுக்கான தேவை குறைதல்.
- புதிய வியாபாரங்களை உருவாக்குவதற்கும், ஏற்கனவே உள்ள வியாபாரங்களை மேம்படுத்துவதற்கும் வங்கிகள் கடன் வசதிகளை குறைப்பதால், வியாபாரிகள் நிதி சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.
